**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S. 207/2023**

**CNR.No.TNCB19000**

Date:04.02.2026 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பி.கே.நடராஜன் | **வயது** | 70 |
| **த/பெ** | **காளியண்ணன்** | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | **பெத்திக்குட்டை** | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 4th February 2026

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

4 ம் பிரதிவாதி நாகேஸ்வரி என் மீதும் அங்கண்ணன் கோவிந்தராஜ் ஆகியோர்கள் மீது அவர் கோயிலை நிர்வாகம் செய்து வருவதை தொந்தரவு செய்யக்கூடாது என்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேட்டுப்பாளையத்தில் அசல் வழக்கு எண்.93/2023 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலமாக ஆஜரானேன். அந்த வழக்கில் அழைப்பாணை வாங்கிய பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி - 11 ல் கடைகளில் உள்ள மின் இணைப்பு மற்றும் சொத்து வரி ரசீது ஆகியவைகள் முருகேசன் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

முருகேசன் இறந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை . 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் முருகேசனின் வாரிசுகள் என்பதை எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் 3 ம் பிரதிவாதி சுந்தரம்மாள் முருகேசனின் மனைவி . நாகேஸ்வரி என்பவர் முருகேசனின் மகள். வாரிசு சான்று கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. 2012 ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அதற்கான அனுமதி காவல்துறையில் பெற்றேனா என்றால்

பெற்றேன். அந்த அனுமதி உத்தரவை தாக்கல் செய்தேனா என்றால் நான் போகவில்லை. பொருளாளர்தான் அனுமதி வாங்கினார் எந்த தேதியில் வாங்கினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை . இந்த வழக்கில் மூதாதையர்கள் கோவிலை கட்டியதாக சொல்லியிருக்கிறேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மூதாதையர்களின் பெயரையும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான் . முருகேசன் உயிருடன் இருக்கும்போது முறைகேடு செய்துவிட்டார் என்று காவல்துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கோவில் கட்டிடத்தை கட்டுவதற்கு முருகேசன்தான் அனுமதி வாங்கினார் என்றால் கமிட்டி எழுதிக் கொடுத்து முருகேசன் அனுமதி வாங்கினார். முருகேசன் கட்டிடத்தை வாடகைக்கு விடுவதற்கு யார் யாரிடம் எவ்வளவு முன்தொகை வாங்கினார் என்பது குறித்து பிராதில் சொல்லவில்லை என்றால் எவ்வளவு வாங்கினார் என்று எனக்கு தெரியாது.

வா. சா. ஆ. , 4, 6, 10 மற்றும் 12 ஆவணங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கொடுத்ததற்கான ஒப்புகை சீட்டு அல்லது அஞ்சலக ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . மேற்கண்ட ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . செயலாளர்தான் அனுப்பி வைத்தார்.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.